பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 25 வியாழக்கிழமை 08.05.2025 கதிர் 187

## இது ரகசியம் அல்ல!

முன்னாள் சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலவுக்கு எதிரான வழக்கு ஒரு தீர்க்கமான கட்டத்திற்குள் நுழைந்துள்ளது.

நரம்பியல் நோய்களுக்குப் ☞ 2

# வடக்கில் சர்வதேச தலையீடு தேவை

## தூதுவர்களிடம் தமிழ்த் தேசிய பேரவை வலியுறுத்து



**வடக்கிலுள்ள காணிகள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல், குருந்தூர்மலை விவகாரம், தையிட்டி விகாரை விவகாரம் என்பன தொடர்பில் கொழும்பிலுள்ள சர்வதேச இராஜதந்திரிகளிடம் எடுத்துரைத்திருக்கும் தமிழ்த் தேசிய பேரவையின் பிரதிநிதிகள், இவ்விடயங்களில் சர்வதேச சமூகம் தலையீடுசெய்து, உரிய அழுத்தங்களை வழங்கி,** ☞ 2

## இன்று ஏலம்

ஜனாதிபதி அலுவலக அதி சொகுசு வாகன ஏளத்தின் இரண்டாவது கட்டமாக சொகுசு வாகனங்கள் மற்றும் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட 26 வாகனங்கள் இன்று ஏலமிடப்படவுள்ளன.

விற்பனை செய்யப்படவிருக்கும் அனைத்து வாகனங்களும் பத்து வருடங்களுக்குள் உற்பத்தி செய்யப்பட்டவை என்பதுடன் அதற்கமைவான விலைக் கோரல் நேற்று முடிவுற்றது.

நாளைய தினம், பீ.எம்.டபிள்யூ.மோட்டார் ☞ 8

## தேயிலையால் அதிகூடிய வருமானம்

தேயிலையின் மூலம் சுமார் 11 ஆண்டுகளின் பின்னர் அதிகூடிய வருமானம் கிடைத்துள்ளது. இலங்கையின் பெருந்தோட்டக் கைத்தொழில் துறையை அதிக வருமானம் ஈட்டும் துறையாக மாற்றி அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை 2.5 பில்லியன் டொலராக அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதாக பெருந்தோட்டக் ☞ 2

# கொழும்பில் ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவு தர சர்வஜன சக்தி பின்னடிப்பு

கொழும்பு மாநகர சபையில் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியமைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாக உறுதியளிக்கவில்லை. ஒத்துழைப்பை கோருவதற்கு முன்னர் ஐக்கிய மக்கள் சக்தி எதிர்க்கட்சிகளுடன் பேச்சு ஈடுபடவேண்டும் சர்வஜன சக்தியின் தேசிய அமைப்பாளர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைப்பதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஏனைய எதிர்க்கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு விடுத்துள்ள அழைப்பு தொடர்பில் வினவிய போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தியின் பொய் மற்றும் வெறுப்பூட்டும் கருத்துக்களை நாட்டு மக்கள் விளங்கிக் கொண்டுள்ளார்கள். ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்து 7 மாத காலத்துக்குள் 23 இலட்சம் வாக்கினை இழப்பது சாதாரணதொரு விடயமல்ல, ஆளும்தரப்பின் மீதான மக்களின் நம்பிக்கை வெகுவாகக் குறைவடைந்துள்ளது.

பெரும்பான்மை பலம் உள்ளது என்ற காரணத்தால் தான்தோன்றித்தனமாக பேசுவதை ஆளும் தரப்பின் முன்னிலை உறுப்பினர்கள் இனியாவது தவிர்த்துக் கொள்ளவேண்டும். மக்களை மூடர்கள் என்று நினைத்துக்கொண்டு ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் குறிப்பிடும் ஒவ்வொரு கருத்துக்களும் ஆளும்தரப்பு வாக்கு வங்கியை பலவீனப்படுத்தும்.

தனித்த பெரும்பான்மையுடன் கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைக்க முடியாத நிலை என்.பி.பிக்கு ஏற்பட்டுள்ளது. ☞ 8

## ஐ.ம.ச. உறுப்பினர்களை பணம் கொடுத்து வாங்க ஆளும்தரப்பினர் முயற்சி

### அஜித் பி பெரேரா எம்.பி. குற்றச்சாட்டு

ஆளும்தரப்பு ஏனைய கட்சிகளின் உறுப்பினர்களின் ஆதரவுடன் உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியமைப்பதற்கான முயற்சிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களிடம் பணம் உட்பட ஏனைய சிறப்புரிமைகள், விசேடசலுகைகளை முன்வைத்து ☞ 2

## ஹரக்கட்டாவின் உடல்நிலையை பரிசோதிக்க நீதிமன்றம் உத்தரவு

தங்காலை விசேட சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள போதைப்பொருள் கடத்தல்காரர் என்று கூறப்படும் ஹரக் கட்டா என்ற நந்துன் சிந்தக விக்ரமரத்னவின் நோய் நிலை தொடர்பில் தங்காலை சட்டவைத்திய அதிகாரி அல்லது அவரால் பரிந்துரைக்கப்பட்ட வைத்திய அதிகாரியிடம் அனுப்பி பரிசோதித்து நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுஜீவ நிஸ்ஸங்க முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

குற்றம் சாட்டப்பட்ட 'ஹரக் கட்டா', சாட்சி கூண்டிலிருந்து, சிறிது காலமாக மூலநோய் உட்பட பல நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவற்றுக்கு சரியான சிகிச்சை அளிக்கப்படவில்லை என்றும் மன்றில் கூறினார்.

தன்னைப் பார்க்க வைத்தியர் ஒருவர் வந்த போதிலும், தனக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை பயங்கரவாத விசாரணைப் பிரிவின் தங்காலை பொறுப்பதிகாரியின் தேவைகளின் அடிப்படையில் அமைந்ததே தவிர வைத்திய பரிந்துரைகளின் அடிப்படையில் அல்ல என்று அவர் கூறினார்.

அதன்படி, தனக்கு வைத்திய ☞ 8

## வடக்கு கிழக்கு எங்கும் முள்ளிவாய்க்கால் கஞ்சி

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு இன்றைய தினமும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

இதன்படி, தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நல்லூரில் உள்ள திலீபனின் ☞ 2

## 'டீச்சர் அம்மா' கைது

புலமைப்பரிசில் பரீட்சை மேலதிக வகுப்புகளை நடத்தும் பிரபல ஆசிரியரான 'டீச்சர் அம்மா' என்று அழைக்கப்படும், ஹயேஷிகா பொன்னாண்டோ, நேற்று நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜரானார்.

இளைஞர் ஒருவரை தாக்கியதற்காக அவரை கைது செய்த பொலிஸார் விசாரணைகளை தொடங்கினர்.

சம்பவத்திற்குப் பிறகு, ஹயேஷிகா பொன்னாண்டோ அப்பகுதியை விட்டு ஓடி தலைமறைவாகியிருந்த ☞ 2

## எதிர்க் கட்சிகளுக்கு அநுரவும் எச்சரிக்கை

மக்கள் ஆணைக்கு எவரேனும் இடையூறு விளைவித்தால் என்னிடம் மூன்றிலிரண்டு பெரும்பான்மை இருக்கின்றது என்பதை நினைவுபடுத்துகின்றேன் என்று ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க நேற்று எதிர்க் கட்சிகளுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

பல பிரதேசசபைகளில் என்பிபி முன்னிலை பெற்றிருந்த போதும் ☞ 2

## அருச்சுனா எம்பியின் வழக்கு ஜூன் 26க்கு ஒத்திவைப்பு

நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வலுவற்றதாக்கி உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை உறுதி செய்ய ஜூன் 26 வழக்கை மீண்டும் அழைக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த மனு நேற்று நீதியரசர்களான மாயாதுன்னே ☞ 2

## போதைப் பொருள் பயன்பாட்டால் ஏற்படும் அதிகரித்த இறப்புக்கள் ஒரு சமூக அவலம்

இலங்கையின் வடக்கு மாகாணம், கடந்த காலங்களில் போர், வறுமை, வேலைவாய்ப்பின்மை ஆகியவைகளால் பாதிக்கப்பட்டதோடு, இப்போது ஒரு புதிய அபாயத்தையும் எதிர்கொண்டு வருகின்றது. அதாவது, ஹெரோயின், குஷ், ஐஸ் (Methamphetamine) போன்ற உயர் வலிமை கொண்ட போதைப் பொருட்களின் அதிகரித்த பாவனை. சமீப காலங்களில் வடக்கில் பதிவாகும் இறப்புக்களின் எண்ணிக்கையை ஆராய்ந்தால், போதைப்பொருள் அடிமை காரணமாக ஏற்பட்டுள்ள உயிரிழப்புகள் அதிர்ச்சி தருவதாக உள்ளன.

2024ஆம் ஆண்டு முழுவதும் இலங்கையில் மொத்தமாகப் பதிவு செய்யப்பட்ட போதைப் பொருள் தொடர்பான இறப்புக்கள் 860-ஐ எட்டியுள்ளன. இதில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா ☞ 2

## புலி ஆதரவாளர்களுக்கு ஊக்கமளிக்கும் என்.பி.பி

### இப்படிக் குற்றஞ்சாட்டுகிறது பெரமுன

தமிழ் இனப்படுகொலையை ஏற்றுக்கொள்ளாத இலங்கையர்கள் கனடாவில் இருந்து கொழும்புக்கு அனுப்பப்படுவார்கள் என்று பிரம்டன் நகர மேயர் குறிப்பிட்டுள்ளமை பாரதூரமானது. தமிழ் இனப்படுகொலை என்பது அடிப்படையற்ற குற்றச்சாட்டு. கனடாவில் வாழும் விடுதலை புலிகள் அமைப்பின் ஆதரவாளர்களுக்கு உத்வேகமளிக்கும் வகையில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் நிர்வாகம் அமைந்துள்ளது என்று பொதுஜன பெரமுனவின் ஊடக பேச்சாளர் சஞ்ஜீவ எதிரிமான்ன தெரிவித்தார்.

கட்சி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

பயன்படுத்தப்படும் 'இம்யூனோகுளோபின்' மற்றும் புற்றுநோய் நோயாளிகளுக்குப் பயன்படுத்தப்படும் 'ரிட்டோக்ஸிமேப்' எனப்படும் தரமற்ற ஆன்டிபாடி தடுப்பூசிகளை வாங்கியதற்காக முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல மஹதா மற்றும் பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரிக்க, தலைமை நீதிபதி மிருது பெர்னாண்டோ நேற்று உயர் நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு ஒன்றை நியமித்தார்.

இந்திய கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களைப் பயன்படுத்தி போலி ஆவணங்களின் மூலமாகத் தருவிக்கப்பட்ட இந்த மருந்துகள் அரசு மருத்துவமனைகளுக்கு விநியோகிக்கப்பட்டன. இது தொடர்பாக 'ஊழல் மற்றும் வீணடிப்புகளுக்கு எதிரான குடிமக்கள் படை'யின் தலைவர் கமந்த துஷார மற்றும் சிவில் அமைப்புகளின் கூட்டணி செய்த முறைப்பாடுகளைத் தொடர்ந்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் விசாரணையைத் தொடங்கியிருந்தனர். ரணில் விக்கிரமசிங்க ஆட்சியில் இருந்தபோதே இந்த விசாரணைகள் தொடங்கப்பட்டன. அமைச்சரும் அதிகாரிகளும் கைது செய்யப்பட்டனர். இதுவரை சிஐடி விசாரணை, வாக்குமூலங்கள், சான்றுகள் என்று இழுபட்டு வந்த வழக்கு தற்போது விசாரணைக்கான தீர்க்கமான இடத்திற்கு வந்துள்ளது.

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்கான நடவடிக்கையை சட்ட மா அதிபர் அலுவலகம் எடுத்து வருகின்றது.

தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்ததாகக் கூறப்படும் 'அய்சுலேட் பயோடெக் பார்மா' நிறுவனத்தின் உரிமையாளர் சுகத் ஜனக பெர்னாண்டோ, மருத்துவ விநியோகப் பிரிவின் இயக்குநர் மருத்துவர் கபில விக்ரமநாயக்க, மருந்துகள் விநியோகப் பிரிவின் உதவி இயக்குநர் சாந்தினி சாலமன், கணக்காளர் (விநியோகங்கள்) நேரன் தனஞ்சய, பங்கு கட்டுப்பாட்டாளர் சுஜித் குமார, சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்தா, மருத்துவ விநியோகப் பிரிவின் துணை இயக்குநர் ஜெனரல் டாக்டர் ஹேரத் முதியன்செலாகே தர்மசிறி ரத்னகுமார ஹேரத், முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, அவசரகால கொள்முதல் குழு உறுப்பினர் டாக்டர் ஜெயநாத் புத்பிட்டிய, சுகாதார அமைச்சின் கூடுதல் செயலாளர் டாக்டர் சமன் ரத்நாயக்க மற்றும் மருத்துவ விநியோகப் பிரிவின் இயக்குநர் டாக்டர் அரம்பேகெதர துசித சுதர்ஷன ஆகியோர் குற்றம் சாட்டப்பட்டுள்ள சந்தேகநபர்களாவார்கள்.

பெரும் சமூக அமைதியின்மையை ஏற்படுத்திய மற்றும் இலங்கைக்கு பெரும் பொருளாதார இழப்பை ஏற்படுத்திய இந்த சம்பவம் குறித்து தாமதமின்றி விசாரித்து தீர்ப்பை வழங்க மூன்று நீதியரசர்கள் கொண்ட அமர்வு ஒன்றை நியமிக்குமாறு தலைமை நீதியரசர் மிருது பெர்னாண்டோவிடம் கடிதம் மூலம் கோரிக்கை வைத்திருந்தார் சட்ட மா அதிபர் பரிந்த ரணசிங்க. அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட தலைமை நீதியரசர், உயர் நீதிமன்ற நீதியரசரானன மகேஷ் வீரமன் தலைமையில், நீதியரசர்கள் அமலி ரணவீர மற்றும் பிரதீப் அபேரத்ன ஆகியோர் கொண்ட அமர்வை நியமித்துள்ளார்.

தரமற்ற ஆன்டிபாடி தடுப்பூசிகளை வாங்கியதால் இலங்கை பெரும் பொருளாதார இழப்பை சந்தித்துள்ளதாக தெரிய வந்துள்ளதால், நீதித்துறை சட்டத்தின் 2018 ஆம் ஆண்டின் 9 ஆம் எண் சிறப்புத் திருத்தத்தின் பிரிவு 12 இன் படி, இந்த சம்பவத்தை ஒரு சிறப்பு வழக்காகக் கருதி, நிரந்தர மூன்று பேர் கொண்ட உயர் நீதிமன்ற அமர்வு முன் வழக்கை விசாரிக்குமாறு சட்ட மா அதிபர் கோரியிருந்தார்.

இனி இந்த வழக்கு விரைவாக விசாரிக்கப்பட்டு தீர்ப்பு வந்துவிடும். மோசடி அரசியல்வாதிகளுக்கு ஒரு எச்சரிக்கையாக அது அமையும் என்று எதிர்பார்க்கலாம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வடக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்வைப் பெற்றுத்தரவேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தலைமையில் உருவாகியிருக்கும் தமிழ்த் தேசிய பேரவையில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும், கொழும்பிலுள்ள பிரிட்டன், கனடா, இந்திய நாட்டுத் தூதர்களுக்கும் இலங்கைக்கான ஐ.நா. பிரதிநிதிக்கும் இடையிலான சந்திப்பு நேற்று புதன்கிழமை இடம்பெற்றது.

இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ பற்றிக்குடன் மு.ப 9.00 மணிக்கு பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்திலும், இலங்கைக்கான இந்தியத் துணை உயர்ஸ்தானிகர் பாண்டேவுடன் மு.ப 10.15 மணிக்கு இந்திய உயர்ஸ்தானிகராலயத்திலும், ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ட்ரூ பிரான்ஞ்சேவுடன் மு.ப 11.30 மணிக்கு கொழும்பிலுள்ள ஐ.நா அலுவலகத்திலும், இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்டன் பி.ப 3.00 மணிக்கு கனேடிய உயர்ஸ்தானிகராலயத்திலும் நடைபெற்ற இச்சந்திப்புக்களில் தமிழ்த்தேசிய பேரவையின் சார்பில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அக்கட்சியின் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சிறிகாந்தா, தமிழ்த்தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசனும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனும் கலந்துகொண்டிருந்தனர்.

இராஜதந்திரிகளுடனான இச்சந்திப்புக்களின்போது பிரதானமாக 3 விடயங்கள் தொடர்பில் எடுத்துரைக்கப்பட்டது. முதலாவதாக வடமாகாணத்திலுள்ள உரிமை கோரப்படாத சுமார் 6000 ஏக்கர் காணிகள் தொடர்பில் கடந்த மார்ச் 28 திகதியிடப்பட்டு வெளியான வர்த்தமானி அறிவித்தல் குறித்து விரிவாக விளக்கமளிக்கப்பட்டதுடன், அதனை ஆளும்தப்பு உடனடியாக மீளப்பெறவேண்டியதன் அவசியம் தொடர்பிலும் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது.

குறிப்பாக வெறுமனே 3 மாதங்களுக்குள் காணிகள் தொடர்பான உரித்தை நிரூபிப்பதில் தமிழ் மக்கள் முகங்கொடுத்திருக்கும் நடைமுறைச்சிக்கல்கள் பற்றி விளக்கமளிக்கப்பட்டது.

அதேபோன்று காணி உரித்தை நிரூபிப்பதற்கான ஆவணங்கள் உரிமையாளர்களிடம் இல்லாத நிலையில், அதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி அக்காணிகளை சுவீகரிப்பதை நோக்காகக்கொண்டே ஆளும்தரப்பு அவசர அவசரமாக இவ்வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டிருப்பதாகவும் வெளிநாட்டு இராஜதந்திரிகளிடம் சுட்டிக்காட்டப்பட்டது.

இரண்டாவதாக கடந்த ஆட்சியின்போது குருந்தூர்மலையில் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த 79 ஏக்கர் காணிக்கு அப்பால், விகாரையை நிர்மாணிப்பதற்கு மேலும் 325 ஏக்கர் காணி தேவைப்படுவதாக அதனுடன் தொடர்புடைய பௌத்த பிக்கு கோரிக்கை விடுத்திருந்தார். இருப்பினும் அக்காணிகள் மக்களின் விவசாய நடவடிக்கைகளுக்காகவே பயன்படுத்தப்படவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டதன் பின்னர், கடந்த வாரம் அக்காணியில் விவசாயத்தில் ஈடுபட்ட இருவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் இராஜதந்திரிகளிடம் எடுத்துரைக்கப்பட்டதுடன், இவ்விடயத்தில் ஜனாதிபதி மட்டத்தில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னரும்கூட, சம்பந்தப்பட்ட பௌத்த தேரர் உள்ளிட்ட தரப்பினர் அதற்கு முரணாக செயற்படுவது பற்றிச் சுட்டிக்காட்டப்பட்டது.

மூன்றாவதாக தையிட்டியில் சட்டவிரோதமாக நிர்மாணிக்கப்பட்டிருக்கும் விகாரை குறித்து இராஜதந்திரிகளின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. அத்தோடு ஏனைய பகுதிகளில் நிர்மாணிக்கப்படும் சட்டவிரோத கட்டடங்கள் எவ்வாறு அகற்றப்படுகின்றதோ, அதுபோன்று இவ்விகாரையும் அகற்றப்படவேண்டியதன் அவசியம் தொடர்பிலும் வலியுறுத்தப்பட்டது.

மேலும் இவ்விடயங்கள் தொடர்பில் சர்வதேச சமூகத்தின் தலையீடு அவசியம் எனவும், இவைகுறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் ஆராயப்படவேண்டும் எனவும் இராஜதந்திரிகளிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

## போதைப் பொருள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டங்களை உள்ளடக்கிய வட மாகாணத்தில் மட்டும் சுமார் 270 இறப்புக்கள் நிகழ்ந்துள்ளன என்பது மத்திய நீதி மற்றும் சுகாதார துறைகள் இணைந்து வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்களில் இருந்து தெரிகின்றது. இது தேசிய அளவில் 30 சதவிகிதம் என்பது கவலையூட்டும் நிலையைக் காட்டுகிறது.

இந்நிலையில் 'ஐஸ்' எனப்படும் னிளமிஜூழிதுஸ்ரீஜூளமிழிதுஷ்ஜள, சிறிய அளவில் எடுத்துக்கொண்டாலும் உடல் மற்றும் மனநலத்திற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. இப்பொருள் தற்போது பள்ளி மாணவர்கள் முதல் பட்டதாரி இளைஞர்கள் வரை பரவலாக பாவிக்கப்படுவதால், எதிர்காலம் திருந்திய சமுதாயமாய் உருவாகுமா என்ற கேள்வி எழுகிறது. போதைப் பொருள் பாவனைக்கு எதிரான அதிகாரபூர்வ நடவடிக்கைகள் பல இடங்களில் நடைபெற்று வருவது உண்மைதான். ஆனால் அவற்றால் தொடர்ந்து ஏற்படும் உயிரிழப்புக்களைக் குறைக்க முடியவில்லை என்றால், எங்கோ திட்டப்பிழை இருக்கிறது என்பதற்குச் சான்றாக அமைகிறது.

இந்தப் பிரச்சினையின் வேர்களை யாரும் அங்கீகரிக்கத் தயங்கக்கூடாது. பொருளாதார அபத்தம், வேலைவாய்ப்பின்மை, உற்சாகமின்மை, போரால் ஏற்பட்டுள்ள மன அழுத்தம் மற்றும் அடக்குமுறைக்குள் வளர்ந்த தலைமுறையின் மனநிலை போன்றவை இப்பிரச்சினையை ஊக்குவிக்கும் முக்கிய காரணிகளாக காணப்படுகின்றன. இதற்கு மேலாக, குற்றவாளிகள் மற்றும் போதைப் பொருள் வியாபாரிகள் குற்றச் சட்டங்களின் பலவீனங்களை பயன்படுத்தி தண்டனையின்றி மீளவும் மீளவும் சமூகத்திற்குத் திரும்பும் நிலையும் இதில் பெரும் பங்களிப்பைச் செய்கிறது.

இதற்குத் தீர்வாக, பொலிஸாரின் அதிரடித் தடை நடவடிக்கைகள் மட்டுமே போதாது. பொதுமக்கள் விழிப்புணர்வும், மனநல ஆலோசனைகள் வழங்கும் மையங்களும், மறுவாழ்வுக்கான திட்டங்களும், பள்ளி மற்றும் பல்கலைக்கழக கல்விக்கான மாற்று வழித்தோன்றல்கள் கொண்ட திட்டங்களும் அவசியமாகின்றன.

வடக்கு ஒரு போதைப் பொருள் தாண்டவ நிலையாய் மாறாதிருக்க, அரசு, சமூக அமைப்புகள், மதத்தலைவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஊடகங்கள் கூட்டு முயற்சியில் இறங்க வேண்டிய நேரமிது. ஒரு தலைமுறையை இழக்க நேரமில்லை. சமூகத்தின் நலனுக்காக, போதைப் பொருளுக்கு எதிரானப் போரில் உடனடி, தீவிரமான நடவடிக்கைகளே தேவை.

## அருச்சுனா ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொரயா மற்றும் மஹேன் கோபல்லவ ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு முன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த மனுவின் சமர்ப்பணங்களை உறுதிப்படுத்த, அதனை எதிர்வரும் ஜூன் மாதம் 26ஆம் திகதி விசாரணைக்கு அழைக்குமாறு நீதியரசர்கள் அமர்வு உத்தரவிட்டது. இந்த மனு சமூக செயற்பாட்டாளர் ஓஷலா ஹெராத்தால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## தேயிலையால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைத்தொழில் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்தியாரத்ன தெரிவித்தார்.

எட்டாவது தேசிய தேயிலை நிகழ்வு செவ்வாய்கிழமை (13) பதுளை முதியாங்கனை விகாரையில் இடம்பெற்றது. அமைச்சர் இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

11 ஆண்டுகளின் பின்னர் இவ்வாண்டின் முதல் காலாண்டில் தேயிலையின் மூலம் அதிகூடிய வருமானம் கிடைத்துள்ளது. 2024ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் தேயிலை மூலம் 355 மில்லியன் டொலர் வருமானம் கிடைக்கப் பெற்றிருந்தது.

எவ்வாறிருப்பினும் சுமார் 11 ஆண்டுகளின் பின்னர் இவ்வாண்டின் முதல் காலாண்டில் அதனை 371 மில்லியன் டொலர் வரை அதிகரித்துக் கொள்ள முடிந்துள்ளது. இலங்கையின் பெருந்தோட்டக் கைத்தொழில் துறையை அதிக வருமானம் ஈட்டும் துறையாக மாற்றி அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை 2.5 பில்லியன் டொலராக அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது என்றார்.

இதேவேளை இலங்கை தேயிலைத் தொழிற்துறைக்கு பங்களிப்பு வழங்கிவரும் அனைத்துப் பங்குதாரர்களின் பங்குப்பற்றலுடன் பெருந்தோட்ட சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தலைமையில் இறக்குவானை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திலும் விசேட நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன.

## டீச்சர் அம்மா ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில், இன்று நீதிமன்றத்தில் ஆஜரானார்.

இந்த சம்பவம் தொடர்பாக அவரது கணவர் மற்றும் முகாமையாளர் இருவரும் அண்மையில் கட்டான பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் இன்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

அதன்படி, இருவரும் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்ட நிலையில், அங்கு ஹயேஷிகா பெர்னாண்டோவும் சட்டத்தரணி ஊடாக நீதிமன்றத்தில் ஆஜரானார்.

தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இரண்டு சந்தேகநபர்களும் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், சந்தேக நபரான ஹயேஷிகா பெர்னாண்டோ மற்றும் நான்கு சந்தேகநபர்களும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

சந்தேகநபர்கள் நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டபோது, தாக்கப்பட்ட இளைஞனின் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் நீர்கொழும்பு நீதிமன்றத்தின் முன் அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## வடக்கு கிழக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நினைவிடத்துக்கு முன்பாக முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

அத்துடன் இலங்கை தமிழ் அரசுக் கட்சியினரின் ஏற்பாட்டில் வல்வெட்டித்துறை - கம்பர்மலை சந்தியிலும் இன்று முள்ளிவாய்க்கால் கஞ்சி பகிரப்பட்டது.

கிளிநொச்சி – தர்மபுரம் பகுதியில் இன்று முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது. அதேநேரம், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் இரத்ததான முகாம் இடம்பெற்றது.

இதேவேளை, முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரின் ஏற்பாட்டில் ஊர்தி பவனி ஒன்று இன்று ஆரம்பமாகியுள்ளது.

வட மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களுக்கும் செல்லவுள்ள குறித்த ஊர்தி பவனி, எதிர்வரும் 18ஆம் திகதி முள்ளிவாய்க்காலை சென்றடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## எதிர்க் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனை வீழ்த்தி எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து ஆட்சியமைப்பதற்கு எடுக்கப்பட்டுவரும் முயற்சி தொடர்பிலேயே அநுர இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார். இதுபோன்றதொரு கருத்தை ஜேவிபியின் செயலாளர் நாயகம் ரில்வின் சில்வாவும் செவ்வாய்க்கிழமை தெரிவித்திருந்தார். எதிர்க் கட்சிகள் அப்படி நடந்துகொண்டால் அவற்றுக்குப் பதிலுக்குப் பதில் கிடைக்கும் என்றும் அவர் எச்சரித்திருந்தார்.

கொழும்பு விகாரமஹாதேவி பூங்காவில் நேற்று நடைபெற்ற ஜேவிபியின் 60ஆவது ஆண்டு பூர்த்தி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இந்தக் கருத்தை வெளிப்படுத்தினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாம் எப்போதும் பொதுமக்கள் முன்னிலையில் பரிசோதனைகளை எதிர்கொள்வதற்கு விரும்புகின்ற இயக்கமாகவே இருக்கின்றோம். இது பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டிய இயக்கமாகும்.

நாம் மக்களின் விருப்பத்தினை ஆராய வேண்டும். மக்கள் மத்தியில் எமது இயக்கம் எங்குள்ளது என்பதைப் பார்க்கவேண்டும். உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் முடிவுகள் குறித்து புனைகதை தலைவர்கள் பல்வேறு வியாக்கியானங்களைக் கூறுகின்றார்கள்.

மெதமுலன வட்டாரத்தில் தோல்வியே காணப்படுகின்றது. கொழும்பு மேற்கில் எமது சகோதரியிடம் எதிர்க்கட்சியின் மேயர் வேட்பாளர் தோல்வி அடைந்துள்ளார். தென்மாகாணத்தில் ஒரு பிரதேசசபையிலேனும் நாம் தோல்வி அடையவில்லை.

மேல்மாகாணத்தினை எடுத்துக்கொண்டால் களுத்துறையில் மூன்று பிரேதச சபைகளை தவிர ஏனைய அனைத்திலும் நாம் வெற்றி அடைந்துள்ளோம். சப்பிரகமுவ மாகாணத்தில் அனைத்திலும் வெற்றி பெற்றுள்ளதோடு வடமேல் மாகாணத்தில் கற்பிட்டி தவிர்ந்த ஏனைய அனைத்து

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# சாரதிகளின் ஒருநொடிப்பொழுது கவனவீனம் வாழ்நாள் முழுவதும் நரக வேதனையை அனுபவிக்கவைத்துவிடும்

## இளங்குமரன் எம்.பி. பச்சாதாபம்

(சுபேசன்)

சாரதிகளின் ஒரு நொடிப்பொழுது கவனக்குறைவு வாழ்நாள் முழுவதும் நரக வேதனையைக் கொடுத்து நிம்மதியைக் கெடுத்துவிடும் என்பதனை ஒவ்வொரு சாரதியும் நினைவிற்கொள்ள வேண்டும் என யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா கம்பளை பிரதான வீதியின் கொத்மலைப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற விபத்துச் சம்பவம் தொடர்பாக வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்; -

இந்த விபத்து இருபதுக்கும் மேற்பட்டவர்களின் உயிர்களைக் காவு வாங்கியுள்ளது. அதே நேரம் மேலும் பலரை உயிருக்கு போராட வைத்துள்ளது.

விபத்து வேண்டுமென்றே ஏற்படுத்தப்படுவதல்ல.ஆனால் எமது சிறு கவனவீனம் பலருடைய எதிர்காலத்தை சிதைத்து விடுகின்றது.

குறிப்பாக பஸ் சாரதிகளுக்கு பலருடைய உயிரைக் பாதுகாக்க வேண்டிய தேவை உள்ளது.

கடந்த காலங்களில் தனியார்-அரச பஸ்களின் போட்டிகளால்ஏராளமானவிபத்துக்கள்நேர்ந்துள்ளன. அதேநேரம் கவனக்குறைவு,தொலைபேசிப் பாவனை மற்றும் மதுபோதையில் சாரத்தியம் என விபத்துக்களுக்கு பல காரணங்கள் உள்ளன.

பொதுப் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற பஸ்களின் தரக்குறைவும் விபத்துக்கு ஓர் காரணமாக கடந்த காலங்களில் இருந்துள்ளன. ஓடிச் செல்லும் பேருந்தின் சக்கரங்கள் தனியே கழன்றோடிய சம்பவங்கள் கூட இலங்கையில் பதிவாகியுள்ளன.

பொதுச்சேவையில் ஈடுபடுகின்ற அனைத்து தனியார்-அரச பேருந்துகளுடையதும்தரம்உறுதிப்படுத்தப்பட வேண்டும்.அதற்கானநடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அதேநேரம் மதுபோதையில் சாரத்தியம், அதிவேகம், கவனக்குறைவு போன்றதவறுகளால் ஏற்படுகின்ற உயிரிழப்புக்களையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

எமது சிறு கவனக்குறைவு அடுத்தவருடைய குடும்பத்தையே சிதைத்து விடுகின்றது. பலர் விபத்துக்களால் அங்கவீனமாகி வீட்டுக்குள் முடங்கியுள்ளனர்.

இலங்கையில்மூன்றுதசாப்தகால யுத்தத்தால் இழந்த உயிர்களுக்கு ஈடாக இன்று வீதி விபத்துக்களால் உயிர்கள் காவு கொள்ளப்படுகின்றன.இதனால் தாய்-தந்தையை இழந்து எத்தனையோ குழந்தைகள் அநாதரவாக நிற்கின்றனர்.



பிள்ளைகளைஇழந்துபரிதவிக்கும்பெற்றோர்களும் ஏராளம்.

கம்பளை-கொத்மலை விபத்தில் கூட ஒன்பதே மாதங்கள் நிறைந்த பச்சிளம் குழந்தை ஒன்று தனது தாய்-தந்தையை இழந்து நிற்கின்றது.

அந்த பிஞ்சுக் குழந்தை தனது தாய்-தந்தையுடன் வெறுமனே ஒன்பதே மாதங்களே வாழக் கொடுத்து வைத்துள்ளது.அந்தத் தாயின் உயிர் பிரியும் வேளையில் அந்த உயிர் எந்தளவு தூரம் பரிதவித்துச் சென்றிருக்கும்,அந்த பிஞ்சுக் குழந்தையின் எதிர்காலம் எப்படி கடக்கப்போகின்றது?

சாரதிகள் அடுத்தவர்களின் உணர்வுகளை மதித்து-மனித உயிர்களோடு விளையாடாது நிதானத்துடன் சாரத்தியம் செய்ய வேண்டும்.ஒரு நிமிட அவசரம் மற்றும் நிதானமிழப்பு பல இழப்புக்களை ஏற்படுத்தி விடும் என்பதனை உணர்ந்து செயற்பட வேண்டும். - என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# மோட்டார் சைக்கிளை துவம்சம் செய்த யானை

(பர்ஸான்)

மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இரு இளைஞர்கள் யானையின் தாக்குதலில் இருந்து தப்பியுள்ளனர்.

இந்தச்சம்பவம் செவ்வாய்க்கிழமை இரவு வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புனாணை ஆறாம் கட்டைப் பகுதியில் வைத்து இடம்பெற்றுள்ளது.

வாழைச்சேனை பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் சென்ற போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யானையின் தாக்குதலில் இளைஞர்கள் தப்பித்துக் கொண்ட போதும் இளைஞர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளை யானை மிதித்து துவம்சம் செய்துள்ளன.



# உரிய நேரத்தில் சம்பளம் வழங்கப்படாமையினால் வவுனியா போக்குவரத்துசபை ஊழியர்கள் அவதி

இலங்கை போக்குவரத்துச் சபையின் வவுனியா சாலையின் ஊழியர்களுக்கான கடந்த மாத சம்பளம் இதுவரை வழங்கப்படவில்லை என குற்றம் சாட்டப்படுகின்றது.

வவுனியா சாலையில் பணிபுரியும் சாரதிகள், காப்பாளர்கள், பொறியியலாளர்கள் ஆகிய ஊழியர்களுக்கே இவ்வாறு சம்பளம் வழங்கப்படவில்லை.

குறித்த ஊழியர்களுக்கு ஒவ்வொரு மாதமும் 8 ஆம் திகதி அவர்களுக்கான சம்பளம் வழங்கப்பட்டு வந்துள்ளது. எனினும் இன்றுடன் 5 நாள்கள் கடக்கின்ற நிலையில் இதுவரை வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பண்டிகைகாலம் இடம்பெற்றுவரும் நிலையில் தமக்கான சம்பளம் வழங்கப்படாமையால்தாம் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். 100

# வெண்கலசெட்டிகுளம் பிரதேசசபையில் ஆட்சி அமைக்கப்போவது எந்தக் கட்சி?

## இரு முனைகளில் கடும் போட்டி திருவுலச்சீட்டுக்கு செல்லும் நிலை

வவுனியா, வெண்கல செட்டிகுளம் பிரதேச சபையில் ஆட்சி அமைப்பது தொடர்பில் இரு முனையில் கடும் போட்டி நிலை ஏற்பட்டுள்ளது.

18 உறுப்பினர்களைக் கொண்ட வவுனியா, வெண்கல செட்டிகுளம் பிரதேச சபையில் ஐக்கிய மக்கள் சக்தி - 2,838 வாக்குகள் - 4 உறுப்பினர்கள், தேசிய மக்கள் சக்தி - 2,085 வாக்குகள் - 3 உறுப்பினர்கள் (போனஸ்-1), இலங்கை தமிழ் அரசுக் கட்சி - 1,957 வாக்குகள் - 3 உறுப்பினர்கள், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி - 1,661 வாக்குகள் - 2 உறுப்பினர்கள் (போனஸ்-1), சிறிலங்கா தொழிலாளர் கட்சி - 1,573 வாக்குகள் - 2 உறுப்பினர்கள் (போனஸ்-2), ஜனநாயக தேசிய கூட்டணி - 1,225 வாக்குகள் - 2 உறுப்பினர்கள் (போனஸ்-1), சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - 626 வாக்குகள் - ஓர் உறுப்பினர் (போனஸ்-1), சுயாதீன குழு 2 - 340 வாக்குகள் ஓர் உறுப்பினர் (போனஸ்-1) என பகிரப்பட்டுள்ளன.

தமிழரசுக் கட்சி மற்றும் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி என்பவற்றுக்கு வவுனியாவின் ஏனைய சபைகளில் ஆதரவு வழங்கியுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அங்கு தான் ஆட்சி அமைக்க தமிழரசுக் கட்சி மற்றும் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி என்பவற்றின் ஆதரவைப் பெற முயல்கிறது.

மறுபுறம், தேசிய மக்கள் சக்தியும் ஆட்சி அமைப்பதற்கான வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளது.இருதரப்பும்18உறுப்பினர்களில் 9 உறுப்பினர்கள் கொண்டுள்ளதாக தற்போதைய நிலையில் தெரியவருகிறது.

குறிப்பாக ஐக்கிய மக்கள் சக்தி, தமிழரசுக் கட்சி,ஜனநாயகதமிழ் தேசியக்கூட்டணி ஒரு கூட்டாக 9 ஆசனங்களைக் கொண்டுள்ளன. மறுபுறம் தேசிய மக்கள் சக்தி, சிறிலங்கா தொழிலாளர் கட்சி, ஜனநாயக தேசியக் கூட்டணி, சிறிங்கா முஸ்லிம் காங்கிரஸ், சுயாதீன குழு-02 என்பன இணைந்து ஓர் அணியாக 9 ஆசனங்களை கொண்டுள்ளன.

சபை தவிசாளர், உப தவிசாளர் தெரிவின் போது சமனிலை ஏற்படும் இடத்தில் திருவுச் சீட்டின் மூலமே தவிசாளர், உப தவிசாளர் தெரிவு செய்யப்படுவர். பேரம் பேசல்கள் தொடரும்நிலையில்யாராவதுமாறுவார்களா அல்லது திருவிலச்சீட்டா என்பதே இப்போது எழுந்துள்ள கேள்வியாகும்.

100

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# போதைப் பொருள் பயன்பாட்டல் ஏற்படும் அதிகரித்த இறப்புக்கள் ஒரு சமூக அவலம்

**இலங்கையின் வடக்கு மாகாணம், கடந்த காலங்களில் போர், வறுமை, வேலைவாய்ப்பின்மை ஆகியவைகளால் பாதிக்கப்பட்டதோடு, இப்போது ஒரு புதிய அபாயத்தையும் எதிர்கொண்டு வருகின்றது. அதாவது, ஹெரோயின், குஷ், ஐஸ் (Methamphetamine) போன்ற உயர் வலிமை கொண்ட போதைப் பொருட்களின் அதிகரித்த பாவனை. சமீப காலங்களில் வடக்கில் பதிவாகும் இறப்புக்களின் எண்ணிக்கையை ஆராய்ந்தால், போதைப் பொருள் அடிமை காரணமாக ஏற்பட்டுள்ள உயிரிழப்புகள் அதிர்ச்சி தருவதாக உள்ளன.**

**2024ஆம் ஆண்டு முழுவதும் இலங்கையில் மொத்தமாகப் பதிவு செய்யப்பட்ட போதைப் பொருள் தொடர்பான இறப்புக்கள் 860–ஐ எட்டியுள்ளன. இதில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களை உள்ளடக்கிய வட மாகாணத்தில் மட்டும் சுமார் 270 இறப்புக்கள் நிகழ்ந்துள்ளன என்பது மத்திய நீதி மற்றும் சுகாதார துறைகள் இணைந்து வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்களில் இருந்து தெரிகின்றது. இது தேசிய அளவில் 30 சதவிகிதம் என்பது கவலையூட்டும் நிலையைக் காட்டுகிறது.**

**இந்நிலையில் 'ஐஸ்' எனப்படும் Methamphetamine, சிறிய அளவில் எடுத்துக்கொண்டாலும் உடல் மற்றும் மனநலத்திற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. இப்பொருள் தற்போது பள்ளி மாணவர்கள் முதல் பட்டதாரி இளைஞர்கள் வரை பரவலாக பாவிக்கப்படுவதால், எதிர்காலம் திருந்திய சமுதாயமாய் உருவாகுமா என்ற கேள்வி எழுகிறது. போதைப் பொருள் பாவனைக்கு எதிரான அதிகாரபூர்வ நடவடிக்கைகள் பல இடங்களில் நடைபெற்று வருவது உண்மைதான். ஆனால் அவற்றால் தொடர்ந்து ஏற்படும் உயிரிழப்புக்களைக் குறைக்க முடியவில்லை என்றால், எங்கோ திட்டப்பிழை இருக்கிறது என்பதற்குச் சான்றாக அமைகிறது.**

**இந்தப் பிரச்சினையின் வேர்களை யாரும் அங்கீகரிக்கத் தயங்கக்கூடாது. பொருளாதார அபத்தம், வேலைவாய்ப்பின்மை, உற்சாகமின்மை, போரால் ஏற்பட்டுள்ள மன அழுத்தம் மற்றும் அடக்குமுறைக்குள் வளர்ந்த தலைமுறையின் மனநிலை போன்றவை இப்பிரச்சினையை ஊக்குவிக்கும் முக்கிய காரணிகளாக காணப்படுகின்றன. இதற்கு மேலாக, குற்றவாளிகள் மற்றும் போதைப் பொருள் வியாபாரிகள் குற்றச் சட்டங்களின் பலவீனங்களை பயன்படுத்தி தண்டனையின்றி மீளவும் மீளவும் சமூகத்திற்குத் திரும்பும் நிலையும் இதில் பெரும் பங்களிப்பைச் செய்கிறது.**

**இதற்குத் தீர்வாக, பொலிஸாரின் அதிரடித் தடை நடவடிக்கைகள் மட்டுமே போதாது. பொதுமக்கள் விழிப்புணர்வும், மனநல ஆலோசனைகள் வழங்கும் மையங்களும், மறுவாழ்வுக்கான திட்டங்களும், பள்ளி மற்றும் பல்கலைக்கழக கல்விக்கான மாற்று வழித்தோன்றல்கள் கொண்ட திட்டங்களும் அவசியமாகின்றன.**

**வடக்கு ஒரு போதைப் பொருள் தாண்டவ நிலையாய் மாறாதிருக்க, அரசு, சமூக அமைப்புகள், மதத் தலைவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஊடகங்கள் கூட்டு முயற்சியில் இறங்க வேண்டிய நேரமிது. ஒரு தலைமுறையை இழக்க நேரமில்லை. சமூகத்தின் நலனுக்காக, போதைப் பொருளுக்கு எதிரானப் போரில் உடனடி, தீவிரமான நடவடிக்கைகளே தேவை.**

# அட்டாளைச்சேனை பிரதேசத்தில் திண்மக்கழிவுகள் முறையாக அகற்றப்படாமையால் மக்கள் விசனம்

*(அபு அலா)*

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் வாரம் ஒரு முறை மேற்கொள்ளப்பட்டுவரும் திண்மக்கழிவு அகற்றும் வேலைத்திட்டம் முறையாக மேற்கொள்ளப்படாமை குறித்து பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கழிவகற்றும் வாகனங்கள் திண்மக்கழிவுகளை பெற்றுக்கொள்ள அடிக்கடி வராமல் இருப்பதால், வீதிகளில் வைக்கப்படும் கழிவுகள் கட்டாக்காலி மாடுகளால் சேதப்படுத்தப்பட்டு, வீதியெங்கும் துர்நாற்றம் வீசுவதுடன், பாதசாரிகளுக்கும், சுற்றுச்சூழலுக்கும் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன.

குறிப்பாக, அரச பொது விடுமுறை தினங்களில் கழிவகற்றும் வேலைத்திட்டம் இடம்பெறாவிட்டால், அது பற்றி பிரதேச சபை - பள்ளிவாசல்கள் ஊடாக அல்லது குறுந்தகவல் மூலம் பொதுமக்களுக்கு முறையான அறிவித்தல்களை வழங்க வேண்டும். ஆனால், பிரதேச சபை இந்த விடயத்தில் தொடர்ந்தும் அலட்சியமாக இருந்து வருகிறது.

மேலும், வீதிகளிலுள்ள கழிவுகள் முறையாக அகற்றப்படுகின்றதா என்பது குறித்து பிரதேசசபையால் எந்த கண்காணிப்பு ஏற்பாடுகளும் இதுவரை செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கின்றனர்.

அட்டாளைச்சேனை பிரதேச சபையில் 50 இற்கும் மேற்பட்ட தமிழ், முஸ்லிம் தொழிலாளர்கள் இருந்தும் தமிழ் சகோதரர்கள் கடமைக்கு வருகை தராத நாள்களில் முஸ்லிம் தொழிலாளர்களைப் பயன்படுத்தி கழிவு



சேகரிப்பு நடவடிக்கையை மேற்கொள்ள உரிய அதிகாரிகள் தயக்கம் காட்டுகின்றனர்.

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் கழிவகற்றும் செயற்பாட்டு முறையில் தமிழ் தொழிலாளர்களுக்கொரு நியாயம், முஸ்லிம் தொழிலாளர்களுக்கொரு நியாயம் என்ற ரீதியில் இவ்வேலைகள் இடம்பெறுகின்றன. இதில் அநீதியான செயற்பாடுகளை அதிகாரிகள் செய்து வருகின்றனர். இவ்விடயம் எந்தவகையில் நியாயம் என்ற கேள்விகளையும் நாங்கள் கேட்க விரும்புகிறோம்.

எனவே தமிழ், முஸ்லிம் தொழிலாளர்கள் எல்லோரும் சமமாக பார்க்கப்பட்டு, திண்மக்கழிவுகள் பெற்றுக்கொள்ளும் செயற்பாட்டை முறையாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மியிடம் அட்டாளைச்சேனை பிரதேச பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# திருக்கோவில் சுயேச்சை தலைவர் சசிகுமாரின் தேர்தல்கால வாக்குறுதிகள் நிறைவேறுகின்றன

*(சகாதேவராஜா)*

திருக்கோவில் பிரதேச சபையில் போட்டியிட்ட சுயேச்சை அணித் தலைவர் பிரபல தொழிலதிபர் சுந்தரலிங்கம் சசிகுமார் தேர்தலுக்கு முன்பும் தேர்தல் காலத்திலும் அளித்த வாக்குறுதிகள் தற்போது படிப்படியாக நிறைவேற ஆரம்பித்துள்ளன.

தேர்தல் முடிவடைந்து ஒரு வார காலத்திற்கு பிறகு ஆலயங்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றியுள்ளார்.

விநாயகபுரம் 3 பெரியதம்பிரான் ஆலயத்தில் முன் மண்டபம் அமைத்து தருவேன் என்று வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றினார்.



சசிகுமார் தனது ஏனைய உறுப்பினர்களுடன் சென்று இந் நிகழ்வுகளில் பங்கேற்றார்.

அதுபோல உமிரி காயத்ரி ஆலய சுற்றுமதில் அமைப்பதற்கான வாக்குறுதியும் நிறைவேற்றப்பட்டது.

இரண்டுக்குமான அடிக்கல் நாட்டு வைபவம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

தவிசாளராகத் தெரிவான சுயேச்சை குழுத்தலைவரான சு.



# சித்ராபௌர்ணமி நடுநிசியில் வேலோடுமலையில் மெய்சிலிர்க்கும் மாபெரும் குபேர வேள்வி யாகம்

(சகாதேவராஜா)

கடந்த சித்ரா பௌர்ணமியில் மட்டக்களப்பு மாவட்டத்தின் சித்தாண்டி இலுக்குப் பொத்தானை வேலோடும் மலையில் அபூர்வ மூலிகைகளிலான மெய்சிலிர்க்கும் அற்புதமான குபேர மகா வேள்வி யாகம் உணர்வு பூர்வமாக நடைபெற்றது .

இதற்கென விசேடமாக இந்தியாவில் இருந்து வருகைதந்த ஒரு மாபெரும் குபேரயோகி, குபேர குருஜி ஸ்டார் ஆனந்த் அவரது குழுவினருடன் இம் மாபெரும் யாகத்தைச் செய்தார்.

வேலோடுமலை முருகனாலய தலைவர் ஓய்வு பெற்ற அதிபர் தியாகராஜா தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஸ்தாபகர் சிவசங்கர் ஜீ பிரதான பாகமேற்று யாகத்தை வழி நடத்தினார்.

முன்னதாக அருகில் உள்ள மலையில் நாக வழிபாடு நடைபெற்றது.


அன்று இரவு நடுநிசியில் இலங்கையில் சித்தர்கள் வாழும் வேலோடும் மலையில் பதினெண் சித்தர்கள் சன்னிதியில் அபூர்வ காய கல்ப மூலிகைகளை கொண்டு ஒரு மாபெரும் சர்வ வல்லமை வாய்ந்த 210 சித்தர்கள் வேள்வி நடைபெற்றது.

அத்துடன் எல்லோருக்கும் அதிசூட்சமமானதன யோக ஆகர்சண குபேர சங்கல்பத்தை செய்து சக்தி வாய்த்த குபேர தீக்ஷையும் வழங்கினார்.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஸ்தாபகர் சிவசங்கர் ஜீ தலைவர் ஆதித்தன் உபதலைவர் மனோகரன் நமசிவாய மகேஸ்வரன் சுவாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.










காலைக்கதிர் Kalaikkathir

# முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி அம்பாறையிலும் நேற்றுப் பகிர்வு

(பாறுக் ஷிஹான்)

அம்பாறைமாவட்ட வலிந்துகாணாமலாக் கப்பட்ட உறவுகளின்சங்கத்தினரால் ஆரம்பிக் கப்பட்ட முள்ளிவாய்க்கால் இனவழிப்பு வாரம் மற்றும் முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி வழங்கும் நிகழ்வும் நினைவேந்தல் பிரார்த்தனையும் சங்கத்தின் மாவட்டத் தலைவி தம்பிராசா செல்வராணி தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

சங்கத்தின் நிருவாக உறுப்பினர்களின் பங்கேற்புடன் இந்நிகழ்வு திருக்கோவில் தம்பிலுவில் பொதுச்சந்தைக்கு முன்பாக இடம்பெற்றது.

சிறப்பாக இடம்பெற்ற இந்நிகழ்வில் சங்கத்தின் ஆலோசகரும் மனித உரிமை செயற்பாட்டாளருமான தாமோதரம் பிரதீவனும் கலந்து கொண்டிருந்தார்.மேலும் விசேட பூசை வழிபாடு இடம் பெற்ற பின்னர் முள்ளிவாய்க்கால் தொடர்பான துண்டுப்பிரசுரங்கள் பொதுமக்கள் வர்த்தக நிறுவனங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

தொடர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சப்பட்டு சிரட்டை ஊடாக மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

செவ்வாய்க்கிழமை முதலாவது இந்நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டு அம்பாறை





மாவட்டத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை இந்த முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு முன்னெடுக்கப்படும் என ஏற்பாட்டாளர்கள் எமது செய்தியாளர் பாறுக் ஷிஹானிடம் தெரிவித்தனர்.

இந்த முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி வைப்பதற்கான அரிசியினை ஒவ்வொரு கடையாகச்சென்றுபடி அரசி பெற்று சேமித்தே காய்ச்சியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# முள்ளிவாய்க்கால் கஞ்சி காரைதீவில் வினியோகம்

(சகாதேவராஜா)

முள்ளிவாய்க்கால் கஞ்சி வாரத்தை முன்னிட்டு வழமைபோல் இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறிலின் ஏற்பாட்டில் புதன்கிழமை காரைதீவு பொதுச் சந்தைக்கு முன்பாக முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

முன்னதாக துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டன . பலரும் உரையாற்றினர்.

நிறைவாக அங்கு முள்ளிவாய்க்கால் கஞ்சி அனைவருக்கும் விநியோகிக்கப்பட்டது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டனர். பொலிஸாரும் படம் பிடித்தனர்.

இதேபோல் இந்த வாரம் பூராக மாவட்டத்தில் சகல பாகங்களிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.






# வவுனியாவில் நேற்றும் 'கஞ்சி'

தமிழின அழிப்பின் 16 ஆம் ஆண்டை முன்னிட்டுவவுனியாவாடி வீட்டில்முள்ளி வாய்க்கால்நினைவேந்தலும்முள்ளிவாய்க் கால் கஞ்சி வழங்கும் செயற்பாடும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது, முள்ளிவாய்க்காலில் இறுதி யுத்ததில் மரணித்த பொது மக்களின் நினைவாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் தலைவி சி.ஜெனிற்றாவினால் ஈகைச்சுடர் ஏற்றிவைக்கப்பட்டதுடன், நினைவு தூபிக்கு மலர்மாலை அணிவித்து மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டிருந்தது.

போராளிகள் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் வாடி வீட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கி வைக்கப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் ப.சத்தியலிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மற்றும் உள்ளூராட்சி உறுப்பினர்கள், முன்னாள்





போராளிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருத்தனர்.

100




# போரில் படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கு கைதடியில் அஞ்சலி

(சுபேசன்)

கைதடிப் பகுதியில் யத்தத்தின் போது படுகொலை செய்யப் பட்ட பொதுமக்கள் மற்றும் 1984-08-13 அன்று படுகொலை செய்யப்பட்ட கைதடி பல்நோக்கு கூட்டுறவுச்சங்க பணியாளர்களுக்கு செவ்வாய்க்கிழமை கைதடியில் உள்ள நினைவுத்தூபியில் அஞ்சலி செலுத்தப்பட்டது.





முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் ஓர் அங்கமாக மேற்படி அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கட்சிக்குள் இருந்த துரோகிகளினால் பாலமுனை மண் தோற்கடிக்கப்பட்டது

## உதுமாலெப்பை எம்.பி தெரிவிப்பு

(அபு அலா)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் இருந்து கொண்டு பதவிகளை அனுபவித்த துரோகிகளினாலேயே அட்டாளைச்சேனை - பாலமுனை பிரதேச இரு வட்டாரங்களும் தோற்பதற்கான காரணம் என்று அம்பாறை மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவித்தார்.



உரம் போட்ட கரங்களுக்கு தரம் கொண்ட நன்றி தெரிவிக்கும் நிகழ்வு அட்டாளைச்சேனை பீச் ரிசோட்டில் கடந்த சனிக்கிழமை

நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

எமது கட்சிக்குள் இருந்துகொண்டு மாற்றுக் கட்சியினரிடம் கள்ளத்தனமாக தொடர்பை வைத்து கடைசி நிமிடம் வரை கட்சியில் தேர்தல் கேட்பதாகக் கூறி கட்சியை ஏமாற்றினார்கள். அவ்வாறான துரோகிகள் இப்போது மக்கள் மத்தியில் வெளிக் கொண்டுவரப்பட்டுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த காலங்களில் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும், இரண்டு இராஜாங்க அமைச்சர்களும் இருந்தகொண்டு தங்களுக்கான தரகர்களையும் குழுக்களையும் உருவாக்கி கட்சியையும், கட்சியின் கட்டமைப்புக்களையும் சீர்குலைத்துள்ளார்கள் என்பது இத்தேர்தலின் மூலம் கண்டறிந்துள்ளோம்.

இன்று கட்சி சிறப்பாக புனரமைக்கப் பட்டுள்ளது. கடந்த தேர்தலில் யார் யாரெல்லாம் எமது வேட்பாளர்களை தோற்கடிப்பதற்கான பல திட்டங்களை முன்னெடுத்த போதிலும், நானும் தேர்தல் குழுவினரும் அந்தத் திட்டங்களை முறியடித்து வெற்றி கண்டுள்ளோம். இது எமது ஒற்றுமையின் பலனால் எமக்கும் எமது கட்சிக்கும் கிடைத்த வெற்றியின் வெளிப்பாடாகும்.

அட்டாளைச்சேனையில் கட்சிக்குள் இருந்து கட்சிக்கு எதிராக செயற்படுவதற்கு 28 நபர்களுக்கு ஒவ்வொரு மாதமும் சம்பளம் வழங்கப்பட்டு வருகின்றது. தேர்தல் காலங்களில் மேலதிக கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டது. இதை வெளிப்படையாக இனம் புரிந்துள்ளது. - என்றார்.

# நாவிதன்வெளி பிரதேச ஒருங்கிணைப்பு கூட்டம்

(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்ட நாவிதன்வெளி பிரதேச ஒருங்கிணைப் புக்குழுக் கூட்டம் அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்க ளின் அபிவிருத்தி குழுத் தலைவரும் அரசியல் பேரவை உறுப்பினருமான தேசிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா தலைமையில் புதன்கி ழமை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நாவிதன்வெளி பிரதேச செயலாளரின் நெறிப்படுத்தலின் கீழ் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெப்பை, நாவிதன்வெளி பிரதேச சபை செயலாளர், நாவிதன்வெளி சுகாதார வைத்திய அதிகாரி, சவளக்கடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, கிராம சேவை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# இராணுவத்தின் 18ஆவது விஜயபாகு படையணியின் வெசாக் தின நிகழ்வு

(பாறுக் ஷிஹான்)

புத்த பெருமானின் பிறப்பு, இறப்பு ஆகியவற்றை நினைவுகூரும் வெசாக் வாரத்தை முன்னிட்டு கல்முனையில் அமைந்துள்ள

இலங்கை இராணுவத்தின் 18 ஆவது விஜயபாகு காலாட்படையணியினரால் ஒழுங்கு செய்யப்பட்ட வெசாக் நிகழ்வுகள் கல்முனை கடற்கரை பிரதேசத்தில் இடம்பெற்றன.

கல்முனை பிரதேசத்தில் இன ஐக்கியத்தை ஏற்படுத்தும் நோக்குடன் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் மல்வத்தையில் அமைந்துள்ள இலங்கை இராணுவத்தின் 24 ஆவது காலாட்படைப் பிரிவின் பிரதம கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் எச்.சி.எல். கலப்பதி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வெசாக் வெளிச்சக் கூட்டின் மின் விளக்குகளை ஒளிரவைத்து ஆரம்பித்து வைத்ததோடு உணவுச்சாலையையும் தொடக்கி வைத்தார்.

பொலிஸ் உயர் அதிகாரிகள் ஊர் பிரமுகர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், உள்ளிட்ட மூவின மக்களும் கலந்து கொண்டனர்.

உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு
•CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
•NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
•வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
•ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
•GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

# 150 உள்ளாட்சி மன்ற பதவிகளை மே 19க்குள் என்.பி.பி. அறிவிக்கும்

பெரும்பாலானஉள்ளூராட்சிமன்றங்களில் நாமே வெற்றி பெற்றுள்ளோம். மே 19க்குள் 150 உள்ளூராட்சி மன்றங்களுக்கான பதவிகளுக்கு பெயர்களை அறிவிப்போம். அதற்கான உரிமை எமக்கு மாத்திரமே காணப்படுகிறது என சுகாதாரத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டன் பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெரும்பாலானஉள்ளூராட்சிமன்றங்களில் நாமே வெற்றி பெற்றுள்ளோம். 266 உள்ளூராட்சி மன்றங்கள் என்பது பெரும்பான்மையைக் கொண்டுள்ளன. இவற்றில் 150க்கும் அதிகமான சபைகளின் தலைவர்கள், உபதலைவர்கள், நகரபிதாக்கள், உப நகர பிதாக்கள், மாநகரமேயர்கள், உப மாநகரமேயர்கள் உள்ளிட்டோரை மே 19க்குள் நாம் பெயரிடுவோம். அதற்கான உரிமை எமக்கே காணப்படுகிறது.

குறித்த சபைகளில் 50 சதவீதம் அல்லது அதற்கு அதிகமான உறுப்பினர்கள் தேசிய மக்கள் சக்தியிலிருந்தே தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர். ஐக்கிய மக்கள் சக்தி வெற்றி பெற்றுள்ளதாகக் கூறப்படும் 14 சபைகளில் ஒன்றுக்கான பதவிகளுக்கான பெயர்களைக்கூட அவர்களால் மே 19க்கு முன்னர் அறிவிக்க முடியாது.

காரணம் அவற்றில் ஒரு சபையில்கூட ஐக்கிய மக்கள் சக்திக்கு 50 சதவீதம் இல்லை. அத்தோடு இவற்றில் 4 சபைகளில் நாமும் ஐக்கிய மக்கள் சக்தியும் பெற்றுக் கொண்ட ஆசனங்கள் சமமாகும்.

எதிர்க்கட்சிகள் ஆட்சியமைக்கும் சபைகளில் அவர்கள் வேலைத் திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுத்து காண்பிக்க வேண்டும். ஆனால் ஒவ்வொரு கட்சிகளிலும், சுயாதீன குழுக்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களால் அவ்வாறு செயற்பட முடியும் என்று நாம் நம்பவில்லை.

எமக்கு வாக்குகள் குறைவடைந்திருக் கின்றதெனில், எதிர்க்கட்சிக்கு அதிகரித்திருக்க வேண்டுமல்லவா? எனவே ஆளும்தரப்புக்கு வாக்குகள் குறைந்திருப்பதாக எதிர்க்கட்சிகள் முன்னெடுக்கும் பரப்புரைகள் அடிப்படை யற்றவை - என்றார்.

## எதிர்க் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபைகளிலும் வெற்றிபெற்றுள்ளோம்.

மிகவும் கடினமான நுவரெலிய மாவட்டத்தில் 12 சபைகளில் பத்து சபைகளில் வெற்றி பெற்றுள்ளதோடு ஏனைய இரு சபைகளிலும் சமமான ஆசனங்களைப் பெற்றிருக்கின்றோம். வன்னி மாவட்டத்தில் அதிகமான வாக்குகளைப் பெற்றுள்ளோம். கிழக்குமாகாணத்தில்திருகோணமலையிலும், அம்பாறையிலும்நாம்வெற்றிபெற்றுள்ளோம். மட்டக்களப்பில் நாடாளுமன்றத் தேர்தலுக்கு நிகரான வாக்குகளைப் பெற்றுள்ளோம்.

கிளிநொச்சியிலும், யாழ்;ப்பாணத்திலும் நாம் இரண்டாம் இடத்தில் உள்ளோம். யாழ். மாநகர சபையில் பத்து ஆசனங்களைப் பெற்றுள்ளோம். பிரிந்துள்ள எதிர்க்கட்சிகள் ஒன்றிணையுங்கள். நீங்கள்ஒன்றிணைந்தால் பிரிந்திருந்தபோது கிடைத்த ஆசனங்கள்கூடக் கிடைக்காது.

தற்போது எதிர்க்கட்சிகள் ஆட்சி அமைப்பதற்காகஒன்றிணைகின்றன. அவர்கள் ஒன்றிணைந்தால் நாம் தேர்தலொன்றை நடத்துவதற்கு எதிர்பார்க்கின்றோம். அவர்கள் ஒன்றிணைந்து அதில் ஏற்படும் பெறுபேறுகளைப் பார்க்க முடியும்.

சில பூஞ்சனம் பிடித்த அரசியல் தரப்பினர் மீண்டும் தலைதூக்குவதற்கு முடியும் என்று கருதுகின்றார்கள். ஒருபிரதேச சபையில்கூட வெற்றி பெற முடியாதவர்கள் ஜனாதிபதியாக முடியும் என்று கருதுகின்றார்கள்.

மூன்று சதவீதமான வாக்குவங்கியை வைத்துக்கொண்டு ஜனாதிபதி, நாடாளுமன்ற வெற்றியைப் பெற்ற ஒரேயொரு கட்சி தேசிய மக்கள் சக்திதான். அதனால் மட்டும்தான் அந்த இலக்கை அடைய முடியும். ஏனையவர்கள் தேசிய மக்கள் சக்தியாக முடியாது.

நாம் எமது இயக்கத்தினை மனச்சாட்சிப்படியே நடத்துகின்றோம். எமது மக்களிடத்தில் எமது இயக்கத்தினை பரிசீலிப்பதற்க தயாராகவே உள்ளோம். எமக்க இது புதிய அத்தியாயம். நாம் பணியாற்றிக்கொண்டே கற்றுக்கொள்கின்றோம்.

இந்தநாட்டுமக்களுடன்எமக்குமனச்சாட்சி ரீதியிலான பிணைப்பு உள்ளது. நாம் இந்த நாட்டு மக்களுக்கு உறுதி அளிக்கின்றோம். இந்த நாட்டை கட்டியெழுப்ப வேண்டும் என்ற விருப்புடன் செயற்படுகின்றோம். அதற்கு மனச்சாட்சிக்கு விரோதமின்றிச் செயற்படுகின்றோம்.

அச்சமடைய வேண்டாம். துணிச்சல் என்பது உடல் பலத்தினை பயன்படுத்துவது அல்ல. எம்மிடம்நிறைவேற்றுஅதிகாரமுள்ளது. நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலமுள்ளது. அதனைப் பயன்படுத்துவதாக இருந்தால் அது துணிச்சல் அல்ல. நாம் உடல்பலத்தினை பயன்படுத்தப்போவதில்லை.

உரிய நேரத்தில் உரிய தீர்மானத்தினை எடுப்பதற்காக நாம் துணிவோம். அதிகாரத்தின் வலிமையை எமது உடல் பலத்தினை அடிப்படையாகக் கொண்டு அளவிடுவதற்கு முயற்சிக்கவேண்டாம். உடல் வலிமை அரசியல் என்பது அடிமை யுகத்துக்குரியது. உடல் ரீதியான பலமான அரசியலை விடவும் உரிய நேரத்தில் சரியான தீர்மானத்தினை எடுப்பதற்கானதுணிச்சலே இருக்கவேண்டும்.

அந்தத் துணிச்சல் எமது கட்சியிடம் இருக்கின்றது. ஆளும்தரப்பிடம் இருக்கின்றது. அவ்வாறில்லை உடல்வலிமையை வெளிப்படுத்த வேண்டும் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள். இன்னும் ஓரிரு வாரங்களில் அதனைப் பார்க்க முடியும்.

எமது ஆட்சி என்பது வியத்தகு நடைமுறைகள் நிறைந்த ஆட்சியாகும். நாம் தவறுகளைத் திருத்திக்கொள்வோம். தவறுகளைபொறுத்துக்கொள்வோம். மீண்டும் கூறுகின்றேன் நாம் கற்றுக்கொண்டே பணியாற்றுகின்றோம். பணியாற்றிக்கொண்டே கற்றுக்கொள்கின்றோம்.

அவ்வாறான நிலையில் நாட்டு மக்களுக்கு ஒன்றைக்கூறவிரும்புகின்றேன். இந்தக்கப்பல் எந்தப் புயல் வந்தாலும் அதன் இலக்கைச் சென்றடையும். எமக்கு பாராளுமன்றில் அதிகமான பலமுள்ளது. ஜூன் 2இன் பின்னர் கிராமத்தின் அதிகாரமும் எமக்கே கிடைக்கும்.

152 உள்ளூராட்சி மன்றங்களில் ஆரம்பத்திலேயே ஆட்சி அமைப்போம் எஞ்சிய 115 ஆட்சியமைக்க வேண்டிய நாளில் ஆட்சியமைப்போம். 267 உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பதற்கு மக்கள் எமக்கு ஆணை வழங்கியுள்ளார்கள். அதற்கு இடையூறு அளிப்பதற்கு எவராலும் முடியாது. அவ்வாறு இடையூறு அளித்தால் சட்டத்தில் வேண்டிய இடமுள்ளது. நாம் எப்போதும் மக்கள் ஆணைக்கு மதிப்பளிக்கின்றோம்.

அரசியல் எச்சங்கள் ஒன்று சேர்ந்து எமக்கு சவால் விடுக்க முடியுமாக இருந்தால் நாங்கள் ஆளும்தரப்பு அல்லவே. மக்கள் ஆணைக்கு எவரேனும் இடையூறு விளைவித்தால் என்னிடம் மூன்றிலிரண்டு பெரும்பான்மை இருக்கின்றது என்பதை நினைவு படுத்துகின்றேன் - என்றார்.

## ஹரக்கட்டாவின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிகிச்சைவழங்கஉத்தரவுபிறப்பிக்கவேண்டும் என்றும் அவர் நீதிமன்றத்தில் கோரினார். இந்தக் கோரிக்கையைப் பரிசீலித்த நீதிபதி, ஒருவர் நோய்வாய்ப்பட்டிருக்கும்போது, அவர் மட்டுமே வலியை உணர்கிறார்கள் என்று கூறினார்.

அதன்படி, பிரதிவாதியின் உடல்நிலை குறித்து நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்க பயங்கரவாத விசாரணை பிரிவின் பணிப்பாளருக்கு உத்தரவிடப்பட்டது.

பிரதிவாதி ஹரக் கட்டா சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி கபில வைத்தியரத்ன, தனது கட்சிக்காரர் பல ஆண்டுகளாக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார் என்று நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் அவர் சார்பாக பிணை விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும், அதை பரிசீலிக்க நீதிமன்றத்திற்கு அதிகாரம் இருப்பதாகவும் ஜனாதிபதி சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.

பின்னர் இந்த வழக்கு மே 28 விசாரணைக்கு எடுத்துக் கொள்ள திட்டமிடப்பட்டது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் காவலில் இருந்தபோது, 'ஹரக் கட்டா' என்ற பிரதிவாதி தப்பிச் செல்வதற்கு சதி செய்தல், உதவி செய்தல் உள்ளிட்ட 22 குற்றச்சாட்டுகளின் கீழ், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் பணியாற்றிய முன்னாள் பொலிஸ் கான்ஸ்டபிள், 'ஹரக் கட்டா' என்ற நந்துன் சிந்தக விக்ரமரத்ன உட்பட மூன்று பிரதிவாதிகளுக்கு எதிராக சட்டமா அதிபர் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

## ஐ.ம.ச.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆளும்தரப்பால் இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் மக்கள் வழங்கியுள்ள தீர்ப்பினை ஆளும்தரப்பு இன்னும் உணரவில்லை. மேலும் சில மாதங்கள் சென்ற பின்னர் ஆளும்தரப்புக்கு இந்தநிலைமைமேலும்மோசமடையும். இந்த யதார்த்தத்தை புரிந்துகொண்டு ஆளும்தரப்பு இனியாவது மக்களின் எதிர்பார்ப்பினை நிறைவேற்ற வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்குநீதிநிலைநாட்டப்படும் என வழங்கப்பட்ட வாக்குறுதி இன்னும் நிறைவேற்றப்படவில்லை. ஆளும்தரப்பால் தாம்பெருமளவில்ஏமாற்றப்பட்டிருக்கின்றோம் என்பதை இன்று பெரும்பாலானவர்கள் புரிந்து கொண்டுள்ளனர். இவ்வாறான நிலைமையிலும் கூட 43 சதவீதமான மக்கள் இந்த ஆளும்தரப்பின் மீது நம்பிக்கைவைத்து அவர்களுக்கு வாக்களித்திருக்கின்றனர்.

இதனை வெற்றி என ஆளும்தரப்புக் கூறிக் கொண்டாலும், அந்த வெற்றியின் பலம் குறைவடைந்துள்ளதுஎன்பதைநினைவுபடுத்த விரும்புகின்றோம். 5 ஆண்டுகள் ஆட்சிபுரிய வேண்டுமெனில், மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற வேண்டுமெனில், மாகாணசபைத் தேர்தலில் வெற்றி பெற வேண்டுமெனில் அரசாங்கம் இதனை விட அர்ப்பணிப்புடனும் உத்வேகத்துடனும் செயற்பட வேண்டியது அவசியமாகும்.

குறிப்பாக வடக்கு, கிழக்கில் ஆளும்தரப்பு படுதோல்வியடைந்துள்ளது. தெற்கு மற்றும் மேல் மாகாணங்களில் நினைத்தளவு வெற்றியைப் பெற்றுக்கொள்ள முடியாமல் ஆளும்தரப்பிற்கு வாக்களித்த மக்களும் செல்ல இடமின்றி தவிக்கிறார்கள். இந்த தேர்தலில் ஆளும்தரப்புக்கு மாத்திரமின்றி எதிர்க்கட்சிகளுக்கும் மக்கள் ஒரு செய்தியை வழங்கியிருக்கின்றனர்.

அந்தவகையில்எதிர்க்கட்சிகள்அனைத்தும் கொள்கை ரீதியில் ஒன்றிணையவேண்டும் என மக்கள் வலியுறுத்தியிருக்கின்றனர். ஆளும்தரப்பு பலவீனமடையும் வரை பார்த்துக் கொண்டிருக்காமல் நாட்டுக்கான மாற்றுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கவேண்டும்.

5 ஆண்டுகள் ஆட்சியை முன்னெடுத்துச் செல்வதற்கு ஆளும்தரப்புக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக உள்ளோம். 5 ஆண்டுகளுக்குள் ஆளும்தரப்பு வீழ்ச்சியடைந்தால் அடுத்து ஆட்சியைக் கைப்பற்றக் கூடியவாறான புதிய அரசியல் கூட்டணியொன்றை அமைக்க வேண்டிய பொறுப்பு எதிர்க்கட்சிகளுக்கு காணப்படுகிறது.

இந்நிலையில் ஆளும்தரப்பு ஏனைய கட்சிகளின் உறுப்பினர்களின் ஆதரவுடன் உள்ளூராட்சிமன்றங்களில் ஆட்சியமைப்பதற்கான முயற்சிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களுக்கும்கூட அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. எனினும் அவர்கள் அதனை நிராகரித்துள்ளனர். பணம் உட்பட ஏனையசிறப்புரிமைகள், விசேடசலுகைகளை முன்வைத்து அரசாங்கத்தால் இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது என்றார்.

## புலி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கனடாவில் பிரம்டன் நகரில் சிங்கௌசி பொதுப் பூங்காவில் விடுதலைப் புலிகள் அமைப்பை நினைவுகூரும் வகையில் நினைவுத்தூபி ஒன்று நிர்மாணிக்கப்பட்டு, கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதற்கு இந்த அரசாங்கம் மறைமுகமாக ஒத்துழைப்புவழங்கியுள்ளது என்றே குறிப்பிட வேண்டும்.

2024.08.14ஆம் திகதியன்று கனடாவில் பிரம்டன் நகரில் பொதுப் பூங்காவில் இந்த நினைவுத் தூபியை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அப்போதைய வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரி இந்தசெயற்பாட்டுக்குஇலங்கைஅரசாங்கத்தின் சார்பில் கடும் அதிருப்தியை கொழும்பில் உள்ள கனேடிய உயர்ஸ்தானிகரிடம் வெளிப்படுத்தினார்.

அத்துடன் இலங்கையில் தமிழ் இன அழிப்புபடுகொலைஇடம்பெற்றதாககுறிப்பிடும் குற்றச்சாட்டு அடிப்படையற்றது. ஆகவே இவ்வாறான செயற்பாடுகள் இலங்கையின் தேசிய நல்லிணக்க உறுதிப்பாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று கனேடிய வெளிவிவகாரத்துறைஅமைச்சிடம் இலங்கை சார்பில் அப்போதைய வெளிவிவகாரத்துறை அலி சப்ரி முறைப்பாடு அளித்திருந்தார்.

நினைவுத்தூபி அமைக்கும் பணிகள் கடந்த ஆண்டின் இறுதிப்பகுதியில் இடைநிறுத்தப்பட்டிருந்த நிலையில், தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க ஆட்சிக்கு வந்ததன் பின்னர் புலம்பெயர்ந்து வாழும் விடுதலை புலிகளின் ஆதரவாளர்கள் உத்வேகமடைந்துள்ளார்கள். ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் கடனா சென்றிருந்தபோது புலிகள் அமைப்பின் ஆதரவாளர்களுடன் நெருக்கமாக செயற்பட்டுள்ளார்.

இந்த நினைவுத் தூபி திறப்பு விழாவில் கலந்துகொண்ட கனடாவின் பிரம்டன் நகர மேயர் பெற்றிக் ப்ரொய்லர் 'தமிழ் இனப்படுகொலையை ஏற்றுக்கொள்ளாத இலங்கையர்களை பிரம்டன் நகரம் அங்கீகரிக்காது, கனடாவும் அங்கீகரிக்காது. அவ்வாறானவர்கள் கொழும்புக்கு திருப்பி அனுப்பப்படுவார்கள்' என்று குறிப்பிட்டுள்ளார். இந்த கூற்று மிகவும் பாரதூரமானது. தமிழ் இனப்படுகொலை என்பது அடிப்படையற்ற

## இன்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாகனம் 01, போர்ட் எவரெஸ்ட் ஜீப் 01, ஹூண்டாயி டெரகன் ஜீப் 01, லேண்ட் ரோவர் ஜீப் 01, மிட்சுபிஷி மொண்டெரோ ஜீப் 01, நிசான் பெற்றல் ஜீப் 03, நிசான் வகை மோட்டார் கார்கள் 02, போர்ஷ் கெயின் மோட்டார் வாகனம் 01, சென்யோன் ரெக்ஸ்டன் வகை ஜீப் 05, லேண்ட் குரூஷர் சஹரா வகை ஜீப் 01, வீ 08 வாகனங்கள் 06 மற்றும் மிட்சுபிஷி ரோசா வகை குளிரூட்டப்பட்ட பஸ் ஒன்றும் ஏலமிடப்படவுள்ளன.

ஜனாதிபதி அலுவலகத்தின் அதி சொகுசு வாகன ஏலத்தின் முதல் கட்டத்தின் கீழ் இதற்கு முன்னதாக 14 சொகுசு வாகனங்கள், பாவனையிலிருந்து நீக்கப்பட்ட 06 வாகனங்கள் மற்றும் உதிரிப் பாகங்களை விற்பனை செய்வதற்கு அமைவான ஏலம் நடத்தப்பட்டது.

ஆளும்தரப்பின் செலவுக்குறைப்பு மற்றும் நிதிப் பொறுப்புக்கூறலை பலப்படுத்தும் நோக்கில் இந்த வாகனங்களை விற்பனை செய்ய தீர்மானித்திருப்பதோடு, முன்னைய ஏலத்தில் 09 டிபெண்டர்கள் உள்ளடங்களாக பல்வேறு வகையான 15 வாகனங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இந்த வாகனங்கள் ஜனாதிபதி செயலகத்தின் நிரந்தர பணிக்குழுவினருக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை என்பதோடு, முன்னாள் ஜனாதிபதியால் தனது பதவிக் காலத்தில் அரசலமைப்பின் 41 (1) உறுப்புரைக்கு அமைவாக பணியமர்த்தப்பட்ட ஆலோசகர்கள் மற்றும் பணிக் குழாமிற்காக வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுவே ஆளும்தரப்பின் பலவீனத்தை எடுத்துக்காட்டுகிறது. கொழும்பு மாநகர சபையில் கூட்டிணைந்து ஆட்சியமைப்பது தொடர்பில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஏனைய அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

கொழும்பு மாநகர சபையில் ஐக்கிய மக்கள்சக்தி ஆட்சியமைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாக நாம் உறுதியளிக்கவில்லை. ஒத்துழைப்பை கோருவதற்கு முன்னர் ஐக்கிய மக்கள் சக்தி எதிர்க்கட்சிகளுடன் பேச்சு நடத்தவேண்டும். முன்வைக்கப்படும் கொள்கைத் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு ஒத்துழைப்பு வழங்குவது குறித்து ஆராய்வோம் - என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட உள்ளூராட்சிமன்ற வேட்பாளர்கள், உறுப்பினர்கள் சந்திப்பு

(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்டத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் மயில் சின்னத்தில் உள்ளூராட்சி மன்றங்களில் வேட்பாளர்களாக போட்டியிட்டவர்கள் மற்றும் உறுப்பினர்களாக வெற்றியீட்டியவர்களுடனான சந்திப்பொன்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தேசியத்தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான றிஷாத் பதியுதீன் அவர்களின் பங்குபற்றுதலுடன் கடந்த செவ்வாய்க்கிழமை சம்மாந்துறையில் இடம்பெற்றது.



இதன் போது அக்கட்சியின் தேசிய அமைப்பாளரும்நாடாளுமன்றஉறுப்பினருமான எம்.ஏ. அஷ்ரப் தாஹிர், நாடாளுமன்ற உறுப்பினர் முத்து முஹம்மது, கட்சியின் தவிசாளர் சட்டத்தரணி எம்.எஸ்.எஸ்.அமீர் அலி, கட்சியின் தேசிய கொள்கை பரப்புச் செயலாளர் கே.அப்துல் றஸாக் மற்றும் கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், அம்பாறை மாவட்ட செயற்குழு உறுப்பினர்களென பலரும் கலந்து கொண்டனர்.





இதன்போதுஉள்ளூராட்சிமன்றங்களில்அகிலஇலங்கைமக்கள் காங்கிரஸின் வகிபாகம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.




## வீட்டுத் திட்டப் பயனாளிகளை பார்வையிட்ட மாவட்ட செயலர்



திருகோணமலை மாவட்ட தம்பலகாமம் பிரதேசசெயலகப்பகுதியில் அமைக்கப்பட்ட உள்ள வீட்டுத் திட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளை திருகோணமலை மாவட்டச் செயலர் அதிபர் டபிள்யூ.ஜீ.எம்.ஹேமந்த குமார களத்துக்கு சென்று பார்வையிட்டார்.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் நெறியாழ்கையின்கீழ் குறித்த பயனாளர்களைபார்வையிட்டார்.

தம்பலகாமம் பிரதேச செயலக பகுதியின் பொற்கேணி கிராம சேவகர் பிரிவு, மீரா நகர், முள்ளிப்பொத்தானை உள்ளிட்ட கிராம சேவகர் பிரிவுகளில் அமையவுள்ள குறித்த வீட்டு திட்ட பயனாளிகளையே இவ்வாறு பார்வையிட்டார்.

இதில் உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## இறம்பொட கெரணாடி எல்ல அருகில் வேன் கோர விபத்து

(கேதீஸ்)



இறம்பொட, கெரண்டியெல்ல பஸ் விபத்து நடந்த இடத்திற்கு அருகிலுள்ள ஒத்த கடே கடைக்கு அருகில் நேற்று (புதன்கிழமை) மாலை வான் ஒன்று வீதியை விட்டு விலகி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் 17 பேர் காயமடைந்தனர் என கொத்மலை பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்தவர்களை கொத்மலை பிராந்திய மருத்துவமனையில் சேர்த்த பின்னர், பலத்த காயமடைந்த பலரை மேலதிக சிகிச்சைக்காக கம்பளை போதனா வைத்தியசாலைக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



நுவரெலியாவிலிருந்து அநுராதபுரம்இராஜாங்கனை நோக்கிச் சென்று கொண்டிருந்த வேன் ஒன்றே இவ்வாறு வீதியை விட்டு விலகி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

மேலும்இந்தவிபத்துதொடர்பானமேலதிகவிசாரணைகளை கொத்மலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பட்டியல் உறுப்பினர்கள் பற்றிய விவரங்களை வழங்குமாறு தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

(சகாதேவராஜா)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் பட்டியல் உறுப்பினர்களை பெயரிடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழு இந்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.

ஏழு நாள்களுக்குள் இந்த பட்டியல் உறுப்பினர்கள் பற்றிய விவரங்களை வழங்குமாறு அறிவித்துள்ளது.

கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களுக்கு இது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பட்டியலில் உறுப்பினர்களை பெயரிடும் போது பெண் உறுப்பினர்கள் தெரிவு தொடர்பில் வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பட்டியல் உறுப்பினர்களின் பெயர்கள் கிடைக்கப் பெற்றதும், ஏற்கனவே தேர்தலில் வட்டாரங்களில் வெற்றியீட்டிய வேட்பாளர்களின் பெயர்களுடன் இணைத்து வர்த்தமானி மூலம் அறிவிக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஜூன் மாதம் 2 ஆம் திகதி உள்ளூராட்சி மன்றங்கள் நிறுவும் நடவடிக்கைகள் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# கனடாவில் பொதுமக்கள் பாதுகாப்பமைச்சராக பதவியேற்ற ஹரி ஆனந்த சங்கரிக்குப் பாராட்டு

## தேசிய மக்கள் சக்தி எம்.பி. இளங்குமரன் தெரிவிப்பு

(சுபேசன்)

கனடாவின் பிரதமர் மார்க் கார்னியின் அமைச்சரவையில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக செவ்வாய்க்கிழமை பதவியேற்ற ஹரி ஆனந்தசங்கரிக்கு தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது வாழ்த்துச் செய்தியில்; மேலும் தெரிவித்தவை வருமாறு –

உலகலாவிய ரீதியாக தமிழர்கள் பல்வேறு சாதனைகளுக்குச் சொந்தக்காரர்களாக தமது தடத்தினை ஆழமாகப் பதித்துள்ளனர்.

அரசியல்,வைத்தியத்துறை,விளையாட்டுத்துறை, விஞ்ஞானம் மற்றும் சினிமாத்துறை என தமிழர்கள் கால்தடம் பதிக்காத துறைகள் இல்லை.

அந்தவகையில் தான் எமது நாட்டிற்கு பெருமைசேர்க்கும் வகையில் எம்மில் ஒருவர் கனடிய மக்களாலும் – அரசாங்கத்தாலும் மதிக்கப்பட்டு இன்று மிக முக்கியமான பொறுப்பான பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

இன, மத, நிற பேதங்களைக் கடந்து ஒரு தமிழரை அந்த நாட்டு குடியுரிமை பெற்ற மக்கள் ஏற்றுக்கொள்வதென்பதும் – அதற்கு மேலாக அந்த நாட்டின் அரசாங்கம் அவருக்கு மிகப் பெரிய பதவியை வழங்குவதென்பதும் அவருடைய திறமைக்கும் – நேர்மைக்கும் – சிறந்த எடுத்துக்காட்டாக அமைகின்றது. இது மிகப்பெரிய வரலாற்றுச்சாதனையும் கூட.

கனடிய அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரியை கடந்த காலங்களில் சந்தித்து கலந்துரையாடியுள்ளேன். சட்டவல்லுனரும்– மனித உரிமைகள் செயற்பாட்டாளரான அவருக்கு மிகப் பொருத்தமான பதவியை அந்த நாட்டு அரசாங்கம் வழங்கியுள்ளது.

இதனூடாக அந்த நாட்டினுடைய ஒட்டு மொத்த மக்களுடைய பாதுகாப்பு மற்றும் உரிமைகள் நிலைநாட்டப்படுவதுடன் – விசேடமாக கனடாவில் வாழும் புலம்பெயர் தமிழ் மக்களுக்கு புத்துணர் வினைக் கொடுப்பதாக இப் பதவிப் பிரமாணம் அமைந்துள்ளது. – என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# சமுத்திரத்தில் சிறப்பாக நடைபெற்ற மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத் தீர்த்தோற்சவம்



(சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற நிந்தவூர் மாட்டுப்பளை மடத்தடி ஸ்ரீமீனாட்சி அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவ திருவிழாவின் இறுதி நாள் தீர்த்தோற்சவம் கடந்த திங்கட்கிழமை சித்ரா பௌர்ணமியன்று சிறப்பாக நடைபெற்றது.

ஆலய வருடாந்த அலங்கார உற்சவ திருவிழா ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் தலைமையில் ஆலய குரு சிவஸ்ரீ சபா கோவர்த்தன சர்மாவின் ஒத்துழைப்புடன் சிறப்பான முறையில் இடம்பெற்று நிறைவடைந்தது.



ஆலயத்தின் தலைவர் கி.ஜெயசிறில் ஆலய ஆலோசகர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் கும்பங்கள் தாங்க மூன்று கிலோமீற்றர் தூரம் நடந்து கடற்கரையை அடைந்து தீர்த்தம் இடம்பெற்றது.




காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் முள்ளிவாய்க்கால் கஞ்சி நிகழ்வு

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பகுதியில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மாவட்ட அமைப்பாளர் துஷானந்தன் தலைமையில் நேற்று முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கிய வைக்கப்பட்டது.

கடந்த 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழின அழிப்பின் போது மிஞ்சிய தமிழர்களின் உயிர்களைக் காப்பதற்காக உப்பில்லாத அரிசிகளை உபயோகித்து நீரை ஊற்றி அங்குள்ள கர்ப்பிணி தாய்மார்கள், குழந்தைகளை காப்பாற்றுவதற்காக தயாரிக்கப்பட்டவையே முள்ளிவாய்க்கால் கஞ்சியாகும்.

மேலும் தமிழினப் படுகொலையைச் சித்திரிக்கும் விதமாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ். நல்லூர் தியாக தீபம் திலீபனின் நினைவிடத்திலிருந்து ஊர்திப்பவனி நேற்று ஆரம்பமாகியுள்ளது.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரம் தற்போது இடம்பெற்றுவரும் நிலையில் இந்த ஊர்திப்பவனி ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் சென்று இறுதியாக முள்ளிவாய்க்காலை சென்றடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.








# எரிபொருள் பவுஸர் கவிழ்ந்து விபத்து

(கேதீஸ்)

கொழும்பிலிருந்து வெலிமடை நோக்கி பயணித்த எரிபொருள் பவுஸர் ஒன்று ஹற்றன் நுவரெலியா பிரதான வீதியில் நானுஓயா ரதெல்ல சுற்று வீதியில் நேற்று (புதன்கிழமை) மாலை நானுஓயா பகுதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

பௌஸரின் உள்ளே 2 தாங்கிகளில் பெற்ரோல் மற்றும் டீசல் இருந்துள்ளது. எரிபொருள் பௌஸர் கவிழ்ந்து விபத்துக்குள்ளானபோது அதிலிருந்து வீதியில் வழிந்தோடிய எரிபொருளை பொதுமக்கள் வாளிகள் மற்றும் போத்தல்களில் எடுத்துச் சென்றனர்.

பின்னர் நானுஓயா பொலிஸார் இதனை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதோடு மூன்று எரிபொருள் பௌஸர்கள் வரவழைக்கப்பட்டு அதிலே எஞ்சிய பெற்றோல் மற்றும் டீசலை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.










இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.05.2025இல் வெளியிடப்பெற்றது